திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

வாக்காளர் பெருமக்களே !





வணக்கம் – நன்றி

29—2—64
12 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

தலையங்கம்

மாலை 17. 29—2—64 மலர். 30

வாழ்க வாக்காளர் !

——[0]——

மாநகராட்சி மன்றத் தேர்தலிலும், நகராட்சித் தேர்தல்களிலும் காங்கிரசுக்குத் தக்க பாடம் கற்பித்து கழகத்திற்கு வெற்றி தேடித் தந்த வாக்காளர் பெருமக்களை முதற்கண் பாராட்டுகிறோம்—நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

நாடு எதிர்பார்த்திருந்த நல்ல முடிவை வாக்காளர் பெருமக்கள் அளித்துவிட்டனர்.

பல இடங்களில் காங்கிரஸ் கோட்டை சரிந்திருக்கிறது!

புதிய இடங்களில் கழகம் வெற்றிகளைப் பெற்றிருக்கிறது.

ஏற்கனவே இருந்த இடங்களில் கழகம் அதிக இடங்களைப் பெற்றிருக்கிறது.

சென்னை மாநகராட்சியில் கழகம் 49 இடங்களையும், கழகத்தின் ஆதரவு பெற்ற முஸ்லிம் லீக் 5 இடங்களையும், சுயேச்சைகள் இரு இடங்களையும் பெற்றுள்ளனர்!

கழகத்தின் தூய தொண்டுக்கு நாட்டு மக்கள் அளித்த நல்ல பரிசாகும் இது!

''நல்ல வாய்ப்பு; நழுவ விடாதீர்!'' என்று நாம் இதே பகுதியில் தேர்தலுக்கு முன் எடுத்துக்காட்டியிருந்தோம்!

வாக்காளர்கள் நல்ல பாடம் புகட்டிவிட்டனர்.

கழகத்தின் மீது காங்கிரஸ் கூட்டணி சுமத்திய கற்பனைக் குற்றச்சாட்டுகளுக்கு வாக்காளர் பெருமக்கள் நல்ல தீர்ப்பளித்து விட்டனர்.

வாக்காளர் பெருமக்களை வாழ்க, வாழ்க என்று வாழ்த்துகிறோம்!

அவர்களுக்கு நம் இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

இந்த மகத்தான வெற்றியைப் பெற அயராதுழைத்த கழகத் தோழர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம்.

தேர்தல் வெற்றி!

தலைவர்கள் கருத்து!

நாவலர் நெடுஞ்செழியன்

திராவிட முன்னேற்றக் கழகம் தனது இலட்சியமான திராவிட நாடு பிரிவினைக் கொள்கையை சூழ்நிலை காரணமாக திருத்திக் கொண்டதை இழிவாகவும், கேவலமாகவும் பேசியதைக் கண்டு சென்னை நகர மக்கள் மயங்கிவிடவில்லை. மாறாக ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் எந்தக் கட்சி தேவையோ அதைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

இந்தத் தேர்தலில் தமிழகத்தின் பல்வேறு நகர்களில் முன்பிருந்ததைவிட தி. மு. க. அதிக இடங்களைக் கைப்பற்றியதுடன் ஐந்தாறு நகராட்சிகளில் ஆளும் கட்சியாகும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

கொள்கையுள்ளதும், கொள்கையற்றதுமான எல்லாக் கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து எதிர்த்தும் கழகத்தின் வலிவு குறையவில்லை; மாறாக வளர்ந்திருக்கிறது.

மேலும் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர் தமது பொறுப்பிலிருந்து ஒருபடி கீழே இறங்கிவந்து பாடுபட்டும், கழகம் வெற்றிவாகை சூடி இருக்கிறது என்றால் அது நகர மக்களின் இதயத்திலிருந்து அழிக்கமுடியாத சக்தி என்பது நிரூபணமாகிறது.

கழகம் சட்டத்தைத் திருத்திக் கொண்ட போதிலும் அதன் வலிவு குறையவில்லை. கழகம் சரியான நேரத்தில் சரியான முடிவு எடுத்திருக்கிறது என்பதற்கு மக்கள் ஆதரவிருக்கிறது என்ற உண்மை தேர்தல் முடிவுகள் மூலம் புலனாகிறது.

கலைஞர் கருணாநிதி

காமராசரின் ஆர்ப்பாட்ட பேச்சுகள், காங்கிரசு அமைச்சர்களின் பொய்ப்பிரசாரம், கம்யூனிஸ்டுகள், பெரியார், கு. கா. தோழர்களின் கர்ணகடூரமான வசைமாரிகள், சென்னையிலுள்ள தினசரி பத்திரிகை சிலவற்றின் கட்டுப்பாடான இருட்டடிப்புப் பிரச்சாரம் இவைகள் அத்தனைக்கும் சென்னை மக்கள் சரியான பாடம் போதித்திருக்கிறார்கள்.

சிறையில் வாடும் கண்ணியத்தின் காவலரான அண்ணா மனம் மகிழச் செய்திருக்கும் வாக்காளர்களுக்கு என் பாராட்டுதல்களும் வசைபாடியவர்களுக்கு நன்றியும் கூறுவதற்கு கழகம் கடமைப்பட்டுள்ளது.

முசுலிம் லீக், சுதந்திரா தொண்டர்களின் பணிக்குப் பாராட்டு. ராஜாஜி, முகமதுஇசுமாயில் ஆகியோருடைய ஆதரவு சென்னை மக்களுக்கு மட்டும் அல்லாமல் பிற மாநிலங்களில் உள்ள காங்கிரசின் வெளிவேடத்தைக்களைய துணைபுரிந்தன.

அமைப்புச் செயலாளர் என். வி. என்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் விடுத்துள்ள செய்தியில் கூறுவதாவது:

சென்னை மாநகராட்சியில் தி. மு. கழகத்தை வலுவடையச் செய்யமாட்டோம் என்று வீராப்பு பேசிய அனைத்திந்திய காங்கிரஸ் தலைவர் காமராசருக்கு சென்னை மாநகர வாக்காளர்கள் தக்க பாடம் கற்பித்துள்ளனர். அதற்கேற்ப இனியாகிலும் காமராசர் தமது பொறுப்புக்கு ஏற்ற நிலைமையில் பேசுவார் என்று நம்புகிறோம்.

அமைச்சர் பதவியிலிருந்து கொண்டே தமது கட்சிக்காக தேர்தலில் ஈடுபடுவது அரசியல் நாகரீகமற்ற செயல் என்பதை மீண்டும் வாக்காளர்கள் இந்தத் தேர்தல் மூலம் அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர்கள் இனியாகிலும் அரசியல் அறத்தை கடைப்பிடிப்பார்கள் என்று நம்புகிறோம்.

அண்ணாவையும் கழகத்தில் உள்ளவர்களையும் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டால் கழகம் சிதைந்து போகும் என்று அவசர அவசரமாக நகராட்சித் தேர்தல்களை நடத்தி ஆதாயம் பெறலாம் என்று எண்ணிய ஆளும் கட்சிக்கு இது சரியான சாட்டையடி ஆகும்.

இந்தித் திணிப்பு அறப்போரில் ஈடுபட்டு சிறையில் வாடும் அண்ணா, மற்ற தலைவர்கள் மகிழ்ச்சி அடையவும் கழகத்தின் வளர்ச்சியை நாடு அறியவும் இந்தத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டாக உள்ளன.

ஆச்சாரியார்

சுதந்திராக் கட்சித் தலைவர் ஆச்சாரியார் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:

பெரும் பத்திரிகைகளின் சாமர்த்தியங்களும் விளம்பரங்களும் ஏமாந்து போனதைக் கண்டு நான் மகிழ்ச்சிதான் அடைகிறேன். வெளியூர் நகராட்சிகளில் பூரண வெற்றி பெறுவோம் என்று பொய்க் கணக்கு காட்டினார்கள். அதனால் சென்னை நகரத்திலும் வெற்றி பெறலாம் என்று எண்ணினார்கள். அவர்கள் படுதோல்வியுற்றது கண்டு திருப்தியடைகிறேன்.

இதுவரையில் இருந்த பலத்தைவிட தி.மு.க. கூட்டணி பெருத்த பலமடைந்திருப்பதைக் கண்டு காங்கிரசின் அகங்காரம் கட்டாயம் குறையும் என்று எதிர் பார்க்கின்றேன்.

சென்னை நகரத்தில் இந்த ஆண்டில் நடந்த தேர்தல் நகராண்மை தேர்தல் அல்ல. இதை ஒரு தேசப் பொதுத் தேர்தலாகவே வைத்துக் கொள்ள வேண்டும். அதன் முடிவு நாட்டு மக்களுக்கு நல்ல பயன் தரும்.

அப்துஸ்சமது

சென்னை மாவட்ட முஸ்லீம் லீக் தலைவர் ஆ. க. அ. அப்துஸ் சமது அவர்கள் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் தி. மு. கழகம், முஸ்லிம் லீக், சுதந்திரா கூட்டணிக்கு வெற்றி அளித்ததின் மூலம் மாநகர் மக்கள் அரசியல் அறிவு பெற்றவர்கள் என்பதை மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தி விட்டார்கள்.

மிகப் பெரிய பொறுப்பிலுள்ள சில தலைவர்கள் மிக தரம் தாழ்ந்து பிரச்சாரத்தில் இறங்கியிருந்தும் தி. மு. கழகத்தை எப்படியும் தோற்கடிக்க வேண்டும் என்ற வெறி உணர்ச்சியோடு, பலர் வேலை செய்தும், நடுநிலை பேணி வந்த பத்திரிகைகள் கூட தேர்தல் நாளுக்கு முன்னர் ஒரு கட்சி சார்பான பிரச்சாரத்தில் நேரடியாக ஈடுபட்டும் கூட மாநகர் மக்கள் தங்கள் தீர்ப்பை தெளிவாக வழங்கி விட்டார்கள்.

துரோகம், தூற்றல் ஆகியவற்றை திரும்பியும் பார்க்க மாட்டோம் என்று அவர்கள் திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்கள்.

இன்னல்கள், இடுக்கண்களுக்கிடையேகூட எதிர்காலத்தில் ஜனநாயகம் இந்த நாட்டில் வாழவும் முடியும்; வளரவும் முடியும் என்ற நம்பிக்கையை கூட்டணிக்கு கிடைத்த வெற்றி உறுதிப்படுத்தியுள்ளது.

இதற்குக் காரணமான அனைவரும் நன்றிக்கும் வாழ்த்துக்கும் உரியவர்கள்.

○

காங்கிரஸ் அமைச்சர்களே; காணுங்கள் கழக வெற்றியை!

இப்போது நடைபெறும் இந்தத் தேர்தல் மிகமிக முக்கியமானது. ஏதோ சாதாரணமாக நடைபெறும் தேர்தல்தானே என்று நீங்கள் கருதிவிடக் கூடாது.

இப்போதுதான் கழகத்தின் சார்பில் இந்தி எதிரப்பு அறப்போர் நடைபெறுகிறது. இப்போதுதான் நூற்றுக்கணக்கான வீரர்கள் இந்தியை எதிர்த்து சிறையிலே இருக்கின்றனர்.

நமது உள்ளங்களிலேயெல்லாம் வீற்றிருக்கும் அறிஞர் அண்ணு அவர்களும் இந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், பேராசிரியர் அன்பழகன், ஏ. கோவிந்தசாமி, மதுரை முத்து உட்பட நூற்றுக்கணக்கான கழக வீரர்களும்சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிருர்கள்.

காஞ்சிபுரத்திலே இந்தியை எதிர்த்து கழகத் தோழர்கள் தினந்தோறும் ஐந்து பேர் வீதம் சிறைபுகுந்து வருகிருர்கள்.

ஞகிய சின்னச்சாமி—தனது வாழ்வை மறந்து—மனேவியை மறந்து—குழந்தையை மறந்து—தனது உயிரையும் மறந்து இந்தியை எதிர்த்து தீக்கு இரையாகி உயிரைத் துறந்தான். சின்னச்சாமி குடும்பம் நடுத்தெருவிலிருப்பதும் இப்போதுதான் என்பதைக் கவனத்திலே நிறுத்துங்கள். இப்படிப் பட்ட நேரத்திலேதான் நகராட்சி—மாநகராட்சிமன்றங்களின் தேர்தல்கள் வந்துள்ளன.

இப்படிப்பட்ட நேரத்திலே முதல் தடவையாக 36 நகராட்சி மன்றங்களுக்குரிய தேர்தல்கள் நடைபெற்றன.

நடைபெற்று முடிந்த இந்தத் தேர்தலேப்பற்றி கக்கன் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதை பத்திரிகைகளிலே பார்த்தேன்.

''தி. மு. க. இந்தத் தேர்தலில் தோல்வி கண்டுவிட்டது'' என்று மந்திரி கக்கன் கூறியிருக்கிருர்.

காங்கிரசுக்கு 9 நகரமன்றங்களிலே கல்தா கொடுக்கப்பட்டுவிட்டது. வாணியம்பாடியிலே முஸ்லிம் லீக் தோழர்கள் வெற்றி பெற்றுள்ளனர். முஸ்லிம் லீக்-சுதந்திரா ஆகிய நமது கூட்டுக் கட்சிகளின் துணேயோடு நம் கைக்குப் பல நகரமன்றங்கள் வந்துள்ளன. இதை மறைக்க தி. மு. க.-வுக்குத் தோல்வி என்று கக்கன் துணிந்து பொய் கூறுகிருர். புளுகுவதற்கு மந்திரி கக்கனு தேவை?

கோவையிலே தி. மு. கழகத்திற்குத் தோல்வி என்கிருர்! தி. மு. கழகத்திற்கா கோவையில் தோல்வி? கம்யூனிஸ்டுக் கட்சிக்குத்தான் தோல்வி.

கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரசை நம்பி அதன் வழி சென்றது. சேரிடம் அறிந்து சேராததால் கம்யூனிஸ்டின் கையில் இருந்த கோவை காங்கிரசு கைக்கு மாறியது. இது எப்படி தி. மு. கழகத்திற்குத் தோல்வியாகும்.

ருக்க வேண்டும். செய்தார்களா? இல்லே!

இப்போது இரண்டாவது கட்டமாக நகராட்சிமன்றத் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

அடுத்து இரண்டாவதாக நடைபெறும் நகராட்சித் தேர்தலிலும் பல நகராட்சிமன்றங்களேக் கழகம் பிடித்தே தீரும்.

இவை முடிந்த பின்பு, மாநகராட்சிமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இந்தத் தேர்தலிலே கூட நாம் வெற்றி பெற்றே தீருவோம்.

சென்னேயிலே நடைபெறப் போகும் மாநகராட்சித் தேர்தலே இந்திய உபகண்டமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஏனென்ருல் கழகத் தலேவர்களும், தோழர்களும் சிறையிலே இருக்கும் நேரம் இந்தியை எதிர்த்து கழகம் போராட்டம் நடத்துகிற நேரமாகும்.

சென்னே தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அமைப்புச் செயலாளர் என். வி. என்.

இந்தியை எதிர்த்து நடைபெறும் அறப்போரைக் காணச் சென்ருல்—அமைதியை நிலேநாட்டச் சென்ருல்—அவர்களேயும் இந்த அரசு கைது செய்கிற நிலேயும் இப்போதுதான் நடைபெற்று வருகிறது.

இதற்கேற்ப மதுரையிலேயும்—காஞ்சியிலேயும் மறியலேக்காணச் சென்ற கழக முன்னணியினரைக் கைது செய்து போலீஸ் வழக்குப் போட்டிருக்கிறது.

சிறையிலே நமது தோழர்கள் சித்திரவதைக்கு ஆளாகி வருகிருர்கள்—கொடுமைகளே அனுபவிக்கிருர்கள். இந்த நேரத்திலே தான் தேர்தல் நடைபெறுகிறது.
கீழப்பழூரைச் சேர்ந்த சின்னச்சாமி — இருபத்தேழே வயதையுடையவன் — திருமணமாகி நான்கே ஆண்டுகளானவன்—இந்தி இந்த நாட்டில் திணிக்கப்படுவதை உணர்ந்தவன்—வங்க சர்க்காரும் காங்கிரஸ் சர்க்கார்தான்—இங்கே உள்ள சர்க்காரும் காங்கிரசு சர்க்கார்தான்—ஆனுல் வங்க சர்க்காரைப்போன்று இந்தி எதிர்ப்புத் துணிவு இங்குள்ள சர்க்காருக்கு இல்லேயே'' என்பதை எண்ணி எண்ணி வருந்தியவன்—வாழவேண்டிய வயதின

காங்கிரஸ் சரிந்துவிட்ட இடங்கள் எல்லாம் கக்கன் கண்களுக்குத் தெரியவில்லே. உண்மையை மறைத்து பொய்யைப் பேசுவது மந்திரிக்கழகல்ல. கக்கன்கூடவா கோயபல்ஸ் ஆவது என்று பரிதாபப்படுகிறேன்!

இப்போது நடைபெற்ற நகராட்சித் தேர்தலுக்கு முன்பு ஒரு நகராட்சிமன்ற நிர்வாகத்தையும் கழகம் பெற்றிருக்கவில்லே. இதை பல மேடைகளில் நாம் சொல்லியிருக்கிருேம்.

முதல் தடவையாக இப்போது நடைபெற்று முடிந்த நகராட்சி மன்றத் தேர்தல்களில் கழகம் நான்கு நகரசபைகளேக் கைப்பற்றியிருக்கிறது.

ஆரணி மக்கள் காங்கிரசைக் கழுத்தைப் பிடித்து தள்ளிவிட்டார்கள். இதுமட்டுமல்ல, ஆரணியிலே 11 பேர் நம்மவர் வெற்றி பெற்றுள்ளனர். ஆம்பூரில் 9 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

நமது உறுப்பினர்களே இல்லாத நெல்லேயில் 9 பேர் வெற்றி பெற்றுள்ளனர். பொள்ளாச்சியிலே 13 தோழர்கள் கழக வீரர்கள் வெற்றியடைந்துள்ளனர்.

கம்யூனிஸ்டுத் தலேவர்களான பி. இராமமூர்த்தி, வி. பி. சிந்தன் போன்றவர்களிடம் கம்யூனிஸ்டுக் கட்சி இருந்திருந்தால், எந்தப் பிரச்சினே எப்படியிருந்தாலும் காங்கிரசை எதிர்க்கும் பிரச்சினேகளிலே கழகத்துடன் ஒன்றுபட்டே நடக்க வாய்ப்பிருந்திருக்கும். ஆனுல் இப்போது கம்யூனிஸ்ட் கட்சி மாஜி ஆயுள் கைதியிடமல்லவா சிக்கிவிட்டது?

இன்று பல இடங்களிலே தி. மு. கழகம் நிர்வாகம் புரியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேல்நாடாக இருந்தால் இந்த நேரம் மந்திரிகள் ராஜிநாமா செய்வார்கள். காங்கிரசு மாட்டுக்குத்தான் சூடு சொரணேயே கிடையாதே.

மாநகராட்சிமன்றத் தேர்தலுக்கு இப்போது சி. சுப்பிரமணியம் வந்து பணிபுரிந்தாரோ, அதே போன்றுதான் திருச்செங்கோட்டுத் தேர்தலிலும் சி. சுப்பிரமணியம் சவால்விட்டு தேர்தல் பிரச்சாரத்தைச் செய்தார். தி. மு. கழகம் வென்றது; காங்கிரசு தோற்றது.

அரசியல் தன்மானம் காங்கிரசுக்கு இருக்குமேயானுல் மந்திரிகள் இந்நேரம் ராஜிஞமா செய்தி

அறிஞர் அண்ணு அவர்கள் சிறையிலே இருக்கிருர்கள். அவர்கள் வெளியே இருந்தால் எப்படி பணியாற்றுவார்களோ அதைப் போல நாமும் பணியாற்றி வெற்றிகளேக் குவிக்கவேண்டும்.

இந்தித் திணிப்பைப்பற்றி பாராளுமன்றத்திலே கழக உறுப்பினர்களான மனுேகரனும், ராசாராமும் மற்றவர்களும் குடியரசுத் தலேவர் உரைமீது நடைபெறவிருக்கும் வாதத்திலே கேட்க இருக்கிருர்கள்.

அப்போது இந்தி வெறியர்கள்; ''இந்தி எதிர்ப்பு என்கிறீர்களே—நடைபெற்ற தேர்தல்களிலே எங்கே உங்கள் வெற்றி?'' என்று கேட்பார்கள், அதற்கேற்ப நாம் பெரும் வெற்றிகளேத் தேடித் தருவோமேயானுல் அவர்கள் அவற்றை ஆயுதமாகக்கொண்டு—பாராளுமன்றத்திலே வாதாடுவார்கள்.

இந்த இந்திவெறி சர்க்காரை—ஆணவம் பிடித்த எதேச்சாதிகார சர்க்காரை அடுத்தத் தேர்தலிலே தூக்கி எறியவும் இந்த வெற்றிகள் பயன்படும்.

o

மாநகராட்சித் தேர்தல் முடிவுகள்

1-வது வட்டம்

கண்ணன் (கம்) 5558
பாலகிருஷ்ணன் (சுயே) 3653
வி. பூபதி முதலியார் ,, 217
இ. நாராயணராவ்.(க.வே.க) 57
தியாகராஜ் (சு) 53
என். பாலசுப்பிரமணியம் ,, 15
செல்லாதவை 175

2-வது வட்டம்

மு. வேதாசலம் (தி.மு.க.) 4005
தங்கராஜ் (காங்) 3582
லோகநாதன் (சுயே) 428
செல்லாதவை 102

3-வது வட்டம்

வரதப்ப நாயக்கர் (காங்) 3024
கே. மாரியப்பன்(தி.மு.க.) 1971
அம்பிகாபதி (கம்) 1139
வி. சுப்பிரமணியம் (சு) 87
மாசிலாமணி ,, 73
ஏ. சுப்பிரமணியம்(க.வே.க.) 20
செல்லாதவை 92

4-வது வட்டம்

திருவேங்கட நாயக்கர் (காங்) 2923
கே. எம். கண்ணபிரான் (தி.மு.க.) 2863
பி. பழனிசாமி (கம்) 304
எம்.எஸ். அருணாசலம் (சு) 37
செல்லாதவை 93

5-வது வட்டம்

எஸ். ஜி. விநாயகமூர்த்தி (காங்) 3118
கே. ஆறுமுகம் [தி.மு.க.] 2304
செல்லாதவை 116

6-வது வட்டம்

ஜி. நாகராசன் (காங்) 2301
குசால்தாஸ் [சுத] 1993
பி. மூர்த்தி நாயக்கர் [சு] 922
செல்லாதவை 67

7-வது வட்டம்

இராசரத்தின நாயக்கர் (காங்) 4568
மு. பாண்டியன்[தி.மு.க.] 2456
டி. வி. எஸ். மணி [சு] 58
செல்லாதவை 106

8-வது வட்டம்

இராமலிங்கம் (தி.மு.க.) 3532
என். சீவரத்தினம் [கா] 2818
பார்ன்ஸ் பரமானந்தம் [சு] 836
செல்லாதவை 86

9-வது வட்டம்

எஸ். தியாகராசன் (காங்) 2874
ஆலடி அருணா [தி.மு.க.] 2408
பாண்டியன் [கம்] 425
பி. வைதீசுவரன் [சு] 293
எஸ். கோவிந்தசாமி ,, 284
டி. பாபுராவ் ,, 87
மணி ,, 19
செல்லாதவை 100

10-வது வட்டம்

வெங்கடேசன் (தி.மு.க.) 2759
மாடசாமி நாடார் [காங்] 2042
மரியதாஸ் [சு] 152
எஸ். கணேசநாயக்கர் ,, 151
வரதராசன் ,, 127
செல்லாதவை 61

11-வது வட்டம்

ஜி. இலட்சுமிபதி (தி.மு.க.) 2960
எஸ். எம். சுந்தரம் [காங்] 2493
பி. கே. சுதர்சனம் [சு] 47
செல்லாதவை 79

12-வது வட்டம்

வி. முனுசாமி (தி.மு.க.) 2210
என். மோகன்ராம் [காங்] 2043
ஜி. ராஜமன்னார் [சு] 906
எஸ். சண்முகம் ,, 28
செல்லாதவை 114

13-வது வட்டம்

அ. செல்வராசன் (தி.மு.க.) 2902
இராமச்சந்திர நாயகர் (காங்) 2836
நாகராசன் (த.அ.க.) 250
செல்லாதவை 60

14-வது வட்டம்

சிலார்மியான் (லீக்) 2847
பக்கீர் முகைதீன [காங்] 990
வி. முனுசாமி [கம்] 990
ஏ. எஸ். நாராயணன் [சு] 114
பாட்சா ,, 42
உஸ்மான் ,, 41
செல்லாதவை 52

15-வது வட்டம்

கே. குப்புசாமி (காங்) 2170
அண்ணாதுரை [சுத] 1177
சோமு [த.அ.க.] 883
ஆர். குப்புசாமி (சு) 21
பாட்சா ,, 10
செல்லாதவை 52

16-வது வட்டம்

கே. கோவிந்தசாமி (தி.மு.க.) 2123
வேணுகோபால் [காங்] 1662
டாக்டர் எம். ஏ. ரகீம்[சு] 226
எம். இராஜகோபால் ,, 49
செல்லாதவை 58

17-வது வட்டம்

ஜி. உமாபதி (காங்) 2475
பி. சி. கந்தசாமி[தி.மு.க.] 2043
தாமோதர முதலியார் [சு] 1233
ரங்கநாதன் ,, 509
ஜி. அழகுவேலு ,, 140
டாக்டர் கந்தன் ,, 57
கே. பொன்னுசாமி ,, 12
செல்லாதவை 70

18-வது வட்டம்

டாக்டர் கே. வி. சாமி (காங்) 2971
பி. எம். கருணாகரன் (தி.மு.க.) 527
எஸ். பெருமாள்செட்டி [சு] 122
வெங்கடேசன் ,, 116
செல்லாதவை 90

19-வது வட்டம்

அபிபுல்லாபேக் (லீக்) 1827
எஸ் சி. வி. கோபால் (கம். ஆதரவு) 1623
பி. எஸ். பாஷ்யம் [சு] 632
நடராசன் [த.அ.க.] 170
ஏ. எஸ். சக்கரவர்த்தி [சு] 125
ரங்கசாமி நாயுடு ,, 39
அந்தோணி ,, 25
செல்லாதவை 46

20-வது வட்டம்

கிருஷ்ணமணி (காங்) 2357
மா. சு. சம்பந்தம் [தி.மு.க.] 1559

21-வது வட்டம்

து. வேணுகோபால் (தி.மு.க.) 1792
பி.எஸ். ஆதித்தன் [காங்] 1560
டி. கருணானந்தன் [சு] 703
பாலையா ,, 627
என். சீனிவாசன் ,, 532
டி. சீனிவாச நாயகர் ,, 496
நாகையா செட்டியார் ,, 434
செல்லாதவை 110

22-வது வட்டம்

ம. மோகனரங்கம் (தி.மு.க) 3337
வி. டி. செல்லப்பிள்ளை (காங்) 2962
பி. எஸ் முனுசாமி நாயகர் (க.வே.க) 258
இரத்தினம் (சு) 524
சமரபுரி ,, 141
ரங்கநாதன் ,, 33
டி. கண்ணன் ,, 27
செல்லாதவை 98

23-வது வட்டம்

ஆர். ஆறுமுகம் (தி.மு.க.) 4105
பஞ்சாட்சரம் (சு) 1671
பி. கருப்பண்ணன் (கம்) 1410
அப்துல் வகாப் (சு) 155
எம். கண்ணன் ,, 86
மணவாளன் ,, 11
மாபூப் ஷெரீப் ,, 35
செல்லாதவை 133

24-வது வட்டம்

எஸ். எம். துரைராஜ் (தி.மு.க.) 3250
ஆர். பலராமன் (காங்) 1923
எம். ஆர். கிருஷ்ணன் (சு) 47
செல்லாதவை 116

25-வது வட்டம்

ஏ. வெங்கடேசன் (காங்.) 3215
மா.ரா. ஏழுமலை (தி.மு.க) 3106
செல்லாதவை 153

26-வது வட்டம்

கே. ஆறுமுகம் (காங்) 4493
சி. எஸ். கணேசன் (தி.மு.க.) 3700
சண்முகம் (சு) 359
செல்லாதவை 164

27-வது வட்டம்

கே. ஏ. சக்ரபாணி (காங்) 3270
எம். ஆர். கண்ணன் (தி.மு.க.) 3067
எம். கே. நவகோடி [சு] 64
பழனி ,, 39
செல்லாதவை 79

28-வது வட்டம்

குருவிட்டல் (காங்) 2179
சானகிராமன் [தி.மு.க.] 1047
நாகேந்திரன் (பி.சோ) 519
முனுசாமி (சு) 30
செல்லாதவை 59

29-வது வட்டம்

நாராயணபிள்ளை (காங்) 1878
குலாப்சந்த் (சுத) 1172
கிருஷ்ணசாமி (சு) 312
பாலசுப்பிரமணி ,, 258
செல்லாதவை 115

30-வது வட்டம்

ஆர். சிவசங்கரமேத்தா (காங்) 2933
எம். பார்த்தசாரதி (சு) 1522
கஜேந்திரன் (சு) 589
நமச்சிவாயபாரதி ,, 67
செல்லாதவை 81

31-வது வட்டம்

தணிகாசலம் [தி.மு.க] 3564
எஸ். சாரதாம்பாள் (காங்) 2870
வேதாசலம் [சு] 951
சிவக்கொழுந்து ,, 501
சண்முகம் ,, 224
செல்லாதவை 104

32-வது வட்டம்

க. அன்பிற்கரசன் [தி.மு.க.] 4524
முத்து செட்டியார் [காங்] 2775
மூர்த்தி [சு] 992
எஸ். ஏ. டி. வேலு ,, 805
ஏகாம்பரம் ,, 176
கிருஷ்ணன் ,, 135
நாகபூஷணம் ,, 123
ஆதிமூலம் ,, 99
வெங்கடராமன் ,, 59
செல்லாதவை 225

33-வது வட்டம்

பி.ஆர். பழனிசாமி [தி.மு.க.] 4755
ஜெகதீசன் (காங்) 3819
கோவிந்தராசன் (சு) 604
பார்த்தசாரதி ,, 372
பி. கண்ணப்பன் ,, 119
செல்லாதவை 165

34-வது வட்டம்

டி. நடராசன் [தி.மு.க.] 2898
சி. கே. நாராயணன் [கு.கா.] 2255
முனுசாமி நாயக்கர் [சு] 494
ஜான் ,, 82
செல்லாதவை 73

35-வது வட்டம்

கோ. லோகநாதன் சிறையிலிருப்பவர் [தி.மு.க.] 3374
எஸ். வனசாட்சி (காங்) 3102

மக்கள் சக்தி வென்றது

கே. முருகேசன் (சு) 586
எம். முருகேசன் ,, 175
கே. ஏ. நாகலிங்கம் ,, 18
செல்லாதவை 132

36-வது வட்டம்

சு. பாலன் [தி.மு.க.] 2130
டி. எம். இராசகோபால் [காங்] 677
வி. கே. வி. சாமி [சு] 587
பி. ஜானகிராமன் [சு] 557
செல்லாதவை 92

37-வது வட்டம்

வரதராசுலு [சு] 2060
பாலசுந்தரம் [காங்] 1871
மாசிலாமணி [தி.மு.க.] 1545
எஸ். எல்லப்பன் (கம்) 488
செல்லாதவை 86

38-வது வட்டம்

தி. சு. நல்லதம்பி [தி.மு.க.] 4211
பி. இ. நடராசன் [கு.கா.] 1432
முத்துசாமி [சு] 938
முகமதுமுர்தசா ,, 321
கோவிந்தராசுலு ,, 202
எஸ். என். உசேனி ,, 72
செல்லாதவை 168

39-வது வட்டம்

டி. கிருஷ்ணமூர்த்தி [தி.மு.க.] 3201
வரதராசன் [காங்] 2731
செல்லாதவை 106

41-வது வட்டம்

தாமோதரன் [காங்] 4477
எஸ்.செகதீசன் [தி.மு.க.] 3555
வி. எம். முனுசாமி [சு] 164
செல்லாதவை 117

42-வது வட்டம்

டி. ஆண்டியப்பன் (காங்) 2740
ஜீவரத்தினம் (தி.மு.க) 2592
எம்.கே. லோகநாதன் [சு] 544
ஜோசப் எஸ். ஏ. தாஸ் ,, 416
திருநாவுக்கரசு ,, 99
செல்லாதவை 110

43-வது வட்டம்

என். ஜம்புலிங்கம் [காங்] 2735
சுப்பிரமணி [தி.மு.க.] 1770
செல்லாதவை 110

44-வது வட்டம்

வேலூர் நாராயணன் [தி.மு.க.] 4027
ஆதிமூல நாடார் [காங்] 3066
செல்லாதவை 163

45-வது வட்டம்

பி. இ. பக்தவத்சலு தி.க. [சு] 4117
ஜி. லோகநாதன் ,, 1883
நரசிம்மலு நாயுடு [சுத] 1684
செல்லாதவை 161

46-வது வட்டம்

டி. எஸ். கோவிந்தசாமி தி.மு.க. ஆதரவு [சு] 4089
வீரராகவலு [காங்] 1921
செல்லாதவை 182

47-வது வட்டம்

மைனர் மோசஸ் [தி.மு.க.] 3558
டி. பி. ரங்கநாதன் கு.கா. [சு] 2349
தீரன் ,, 540
பக்தவத்சலு ,, 86
செல்லாதவை 121

48-வது வட்டம்

ஆர்.வி. ஆதிகேசவலு [காங்] 3936
அமுதாராகவன் (தி.மு.க.) 2865
திருவேங்கடம் [சு] 169
தங்கராஜ் நாடார் ,, 61
செல்லாதவை 116

49-வது வட்டம்

தெய்வசிகாமணி [காங்] 2255
டி. டி. இரரமானுசம் [தி.மு.க.] 2109
ஜேம்சு [சு] 223
செல்லாதவை 13

50-வது வட்டம்

எம். ஜே. அப்பாதுரை [காங்] 2591
வி. எஸ். கோவிந்தராசன் [தி.மு.க.] 2525
சுப்பிரமணி [சு] 114
விசுவநாதன் ,, 244
செல்லாதவை 87

51-வது வட்டம்

எம். கோதண்டபாணி [காங்] 4448
சு. வெ. தட்சிணாமூர்த்தி [தி.மு.க.] 3611
ஈ. வடிவேலு [சு] 165
செல்லாதவை 123

52-வது வட்டம்

இந்திராணி [காங்] 2417
கே. மோகனசுந்தரம் (சிறையிலிருப்பவர் திமுக) 1667
ஏ. கே. நடேசன் [சு] 300
ஏ. பிரான்சிஸ் ,, 57
செல்லாதவை 44

53-வது வட்டம்

எம். ஏ. பழனி (தி.மு.க.) 2610
எம். கிருஷ்ணமூர்த்தி -காங் 2463
ஈ. ஆரோக்கியதாஸ் [சு] 346
தர்மபாலன் ,, 30
செல்லாதவை 44

54-வது வட்டம்

வி. சண்முகம் -காங் 2955
எம். எஸ். இராமச்சந்திரன் -தி.மு க. 2618
கே. எம். நாதமுனி -சுயே 153
ஆர். என். உமாபதி -க.வே.க. 76
செல்லாதவை 108

55-வது வட்டம்

இரா. சம்பந்தம் [தி.மு.க.] 3244
பார்த்தசாரதிசெட்டி -காங் 2700
என். கண்ணன் -சுயே 93
கே. எம். நாதமுனி ,, 52
செல்லாதவை 113

56-வது வட்டம்

மு. சாமிநாதன் (தி.மு.க.) 3077
ஜி. கிருஷ்ணன் -காங் 2681
செல்லாதவை 121

57-வது வட்டம்

எம். ஏ. ஏசுதாசன் (தி.மு.க.) 2029
எஸ். தனபால் -காங் 1929
செல்லாதவை 72

58-வது வட்டம்

சி. சிட்டிபாபு (தி.மு.க.) 3434
சீனிவாசன் -கு.கா. 2055
சி. நாகமுத்து -சுயே 33
செல்லாதவை 110

59-வது வட்டம்

டி. என். கிருஷ்ணன் (தி.மு.க.) 3037
ரகிமது உன்னிசாபேகம் -காங் 2200
சீனிவாச அம்பலகார் -சு 136
செல்லாதவை 88

60-வது வட்டம்

கோ. இளவரசு [தி.மு.க.] 2983
எம். செல்வராசு -காங் 2367
எம். பச்சையப்பன் -கம் 565
எம். ஏ. சுப்பிரமணிய முதலியார் 173
செல்லாதவை 107

61-வது வட்டம்

ஏ. கண்ணன் [காங்] 2752
பொன்-நடராசன் -தி.மு.க. 2260
டி. தனபால் -சுயே 63
செல்லாதவை 64

62-வது வட்டம்

எஸ். கன்னியப்பன் -தி.மு.க. 2001
எல். இருதயராஜ் -காங் 1833
சுந்தரராஜ் -சுயே 752
ஆரியசங்காரன் -க.வே.க. 591
மார்ட்டீன் -சுயே 230
எம். ஜோசப் ,, 19
செல்லாதவை 102

63-வது வட்டம்

மதனகோபால் -காங் 2645
ஏ. சுப்பிரமணியம் கழக ஆதரவு -சுயே 2480
செல்லாதவை 104

64-வது வட்டம்

பொ.கு.இராமதாஸ் (தி.மு.க.) 3348
லாரன்ஸ் -காங் 2259
ஆறுமுகம் -த.அ.க. சுயே 357
செல்லாதவை 85

65-வது வட்டம்

ஏ. ஏ. கபாலமூர்த்தி -தி.மு.க. 3037
கே. வெங்கட் -காங் 2523
பி. ஏ. மூர்த்தி -சு 636
செல்லாதவை 83

66-வது வட்டம்

அ. கரிகாலன் -தி.மு.க. 3064
தி.மணிவண்ணன் -கு.கா. 2767
ஏ. கிருஷ்ணசாமி -சு 85
செல்லாதவை 97

67-வது வட்டம்

கே. பாஸ்கரன் -தி.மு.க. 3143
எம்.இராசகோபால் -காங் 2745
நாராயண பாபு -சு 53
சி. எம். பாலுசாமி ,, 89
செல்லாதவை 89

68-வது வட்டம்

நாகூர் மீரான் -லீக் 3127
டி. வேணுகோபால்ராவ் —காங்கிரசு ஆதரவு சுயே 2473
ஆர். சந்திரன் ,, 245
எத்திராஜ் ,, 61
செல்லாதவை 93

69-வது வட்டம்

கன்னையா பிள்ளை -காங் 2817
எஸ்.ஜம்புலிங்கம் தி.மு.க. 1942
ஜி. எல்லப்பன் -சு 750
வி. கோவிந்தராசுலு ,, 107
டி. காந்தாராவ் ,, 47
செல்லாதவை 63

70-வது வட்டம்

டி. இராசகோபால் பிள்ளை -காங் 2895
அ. பொ. அரசு -தி.மு.க. 2636
செல்லாதவை 87

71-வது வட்டம்

சையத் அமானுல்லா -லீக் 2444
முனவர் உசேன் -காங் 1423
சுப்பிரமணியராவ் -சு 1276
எத்திராசன் ,, 171
செல்லாதவை 70

72-வது வட்டம்

எஸ்.எம். கிருஷ்ணன் தி.மு.க. 3197
இராசு பிள்ளை -காங் 2661
முகமது இஸ்மாயில் -சு 137
செல்லாதவை 68

73-வது வட்டம்

மோகன் -காங் 2295
செகதீசன் -தி.மு.க. 2228
துரைக்கண்ணு -சு 663
இராசகோபாலன் த.அ.க. 228
செல்லாதவை 111

74-வது வட்டம்

பி.ஆர். நாகராசன் -தி.மு.க. 2526
கே.எஸ். ஏகாம்பரம் -காங் 2378
குப்புசாமி -சு 47
பார்த்தசாரதி ,, 900
செல்லாதவை 72

75-வது வட்டம்

இரகுநாதன் -காங் 2568
இலட்சுமி நரசிம்மன் -சுத 1973
பட்சி ராசகோபாலன் த. அ. க. 1759
செல்லாதவை 57

(11-ம் பக்கம் பார்க்க)

காமல் விழித்துக்கொண்டேதான் இருக்கும்!

நேரத்திற்கு நேரம் ஓசை யெழுப்பி உலகத்தை உவகையில் ஆழ்த்தும் இயற்கையின் இனிய கீதம், பசுமை நிற சோலையில் பவனி வருவது போல், அவர்களின் காதல் நிறைந்த உள்ளத்தில் மாருத அன்பு அசைந்தாடிக் கொண்டுதான் இருக்கும்; மாலை விட்ட மணாளனின் மனம் போல் நடக்க ஒரு போதும் இணங்காது!

இருவருக்கும் 'பிரியக்கூடாது' என்ற உறுதி உண்டு!—பிரிந்தாலும் 'மறக்கக் கூடாது' என்ற திடமும் உண்டு. பிறந்தும் இருந்தும்—இருந்தும் பயனென்ன?

மங்களம் நன்கு அறிந்தவள்தான்; மாறுபட்டு நடக்கும் திருமணத்தை எவ்வளவு எதிர்த்தும் அவள் முடிவுக்கு வெற்றி கிடைக்கவே இல்லை. மண் பொம்மை போல் நின்றிருந்தாள் — மனக் கவலையில் உருகி வந்தாள்; ஆனுல் கதிரவன் வீட்டிற்கு ஓடி விட அவளுக்குத் துணிவில்லை. சிறு வயதிலிருந்தே மாணிக்கத்தின் மிரட்டலுக்குப் பயந்தவளாகி விட்டிருந்ததால் இன்றும் அந்த மிரட்டல் அவளை கோழையாக்கிக் கொண்டே இருந்தது!

கதிரவன் உறுதிக் கொண்டாலும் மங்களம் சாதகத்தின் தீர்ப்பைக் கேட்டு நடுநடுங்கினுள். 'நம்மால் அவர் ஏன் சாக வேண்டும்?' என்ற கருணை நெஞ்சம் அவள் சூளுரைக்கு உலை வைத்து விட்டது!

பலரும் பலவிதமாகக் கூறினுல் நல்லவனும் பைத்தியக்காரனுக மாறி விடலாம்; அவளையும் அப்படிதான் சாதகத்தைக் காட்டி, காட்டி பயமுறுத்தி விட்டார்கள்! பாவம், பெண்ணல்லவா? மாணிக்கத்தின் இரத்தக் கண்களை பார்க்கும்போதே நெருப்பில் காய்ச்சிய வெற்றிலை துளிர்போல் வதங்கினுள்—வாயடைத்து மௌனம் சாதித்துக் கொண்டாள்!

உள்ளங் கையில் மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் நெல்லிக்கனி போல், மங்களத்திற்கு மாணிக்கம் பாதுகாவல் இருந்து வந்தான்; காவல் பலமாக இருக்கிற போது, கதிரவன் எப்படிதான் போராடினுலும், அவன் இதய விளக்கை மீட்கவே முடியவில்லை.

பாழும் சாதகத்தின் சகதல புரட்டலுக்கு மதியை அடமானம் வைத்தோரின் கருத்திற்கு எத்தனை வகைக் காரணம் எடுத்துக் காட்டினுலும், பாலை நிலத்து வெயில் போல் காய்ந்தார்கள்—கடிந்து கதிரவனின் அன்புமொழியைக் காலால் உதைத்துவிட்டே சென்ருர்கள்!

இதனுல்,

காதல் உறவு அறுந்தது; தென் துருவத்தின் தாரகையாகி விட்டது அவர்களின் நட்பு.

இருந்தாலும்,

கண்கள் இரண்டானுலும் பார்வை ஒன்றே போல் காதுகள் இரண்டானுலும் கேட்பது ஒன்று போலவே உருவங்கள் இரண்டானுலும் இதயம் ஒன்ருகவே மாறிவிட்டது.

இந்நேரத்தில்,

திருமண நாளும் நெருங்கி விட்டது!

மணமிழந்த மலராக மங்களம் மாறிவிட்டாலும், மனங் கவரும் எழில் வண்ணம் மாறவில்லை; நல்மணமற்ற மலரென்று எண்ணி நடையை வேறு பக்கம் திருப்பினுலும் கதிரவனின் கண்களில் வழிகின்ற நீர் நிற்கவில்லை!

ஆடை அணிந்து, மணிமாலை பூண்டு வண்ணக்கொடி போல் மங்களத்தை சோடித்து, மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துப் போனுலும், அவள் உள்ளம் கதிரவனின் இதயத்தையே இல்லமாகக் கருதி, அங்கேயே ஒளிந்துக் கொண்டிருந்தது!

இதயத்தில் அவள் நெஞ்சம் நிலைத்து விட்டிருந்தாலும், சூரிய உதயத்தில் புரண்டெழுந்த எருதுகளின் கால்கள் போலவே இருந்துவிட்டான் கதிரவன்!

தீராதப் போராட்டமாகிவிட்ட அவர்களின் காதல் பிரிவினை அவர்களை உள்ளுக்குள்ளவே அழவைத்தது. வெந்த புண்ணில் நெளிந்து கிடக்கும் புழுப் போல், அவர்களின் மாசு மருவற்ற நெஞ்சத்தில், ஒன்றிக் கலந்துவிட்ட அன்பை, நினைப்புக் கொண்டுவந்துக் கொட்டிக் கொண்டே இருந்ததால், மன நோய் வளர்ந்த வண்ணமாக இருந்தது!

அக் கரையில் தாயும், இக் கரையில் குழந்தையும் அழ; நடுவில். கலகலப்புடன் புரண்டோடும் புது வெள்ளம்போல் மங்களம் வாடி நின்ருள் ஒரு பக்கம்; கதிரவன் குமுறி நின்ருன் மறு பக்கம்; மாணிக்கம் திருமணக் காரியத்தில் முழு மனதாக ஆடிக் கொண்டிருந்தார் இடையில்.

மங்களத்தின் வருங்கால மணவாளன் மார்கண்டேயன் பெரிய இடத்துப் பையன்! கொஞ்சம் படித்திருந்தாலும், படாடோப வாதி! முழு நாகரிக சிகரமாக நடிப்பதில் சிறந்தவன். எல்லாம் கண்டவன் போல் பேசுவபன்; சொல்லால் எவரையும் மட்டந் தட்டிவிட மிக மிக முயற்சிப்பான்; தமிழே தெரியாத வடநாட்டுப் பேர்வழி போல் இனிமைத்தமிழை குதப்பி உமிழ்வான்.

வேளைக்கொரு உடை; நாளைக்கொரு கிருப்பு; வாரத்திற்கொரு வாகனம்! மாதத்திற்கு ஓர் இடம்; வருடத்திற்கு சரசல்லாபச்சிங்காரிகளின் வீட்டில் சீட்டாடி, சிகரெட்டு ஊதி, குடித்தாடும் கபாலிகளின் கூட்டத்தில் மகிழ்ந்திருப்பான்!

இந்த நற்குண சீலருக்குத் தான்,

வைரச் சிலையாள்—வண்ணக் கொடியாள்...விண்ணிலே கண் சிமிட்டும் தாரகை எழிலாள் இல்லக் கிழத்தியாம் மங்களம்!

அழகு நடை—பவழ மல்லிப் பூ இடை—வயலில் விளையாடும் கரும்பூச்சின் சடை உடைய இந்த மாடப் புருதான்—மங்களம் தான் மனைவியாம்!

யாழ் இசை மொழியாள்—அன்புப் பேழை இதயாள்—வாழை இளங் குருத்தின் பண்பு நிறைந்த, இந்த மங்களம்தான் மார்கண்டேயனின் வாழ்க்கைத் துணைவியாம்!

இதுதான் பொருத்தமாம்(?) சாதகம் காட்டும் 'நல்வழியாம்(?) வாழ்வெல்லாம் இன்பம் அனுபவிக்கும் சரியான சோடியாம்!

சிந்தனை உடையவன்—சிரித்துப் பேசி சிரமத்தைப் போக்குபவன்—சீறழிந்தார் நிலை கண்டு கண்ணீர் சிந்துபவன் கதிரவன்—இவனை மணந்தால்... ...

பொது நலவாதி—சூதுவாதற்ற பகலவன் எழில் சோதி — 'அகிலம் அனைவருக்கும் சொந்தமென ஓதிச் செல்லும் கதிரவன்—இவனை துணையாகக் கொண்டால் ... ...பூ மொட்டுப் போன்ற உடல்—நிலவு வட்டம் போன்ற முகம் கிளை ஆண் மானின் நடை போடும் கதிரவன் இவனை—கணவனுக ஏற்ருள்,

உப்புப் பட்டப் பால்—வெப்பம் பட்டப் பனிபோல்—துப்பிவிட்ட தாம்பூலம் போல் அவர்களின் வாழ்க்கை கெட்டுவிடுமாம்! சாதகம் சொல்லிற்ரும் இவ்வாறு!

அதனுல், மங்களத்தை மார்கண்டேயனுக்கு மனைவியாக்க, மங்களத்தை மணப்பெண்ணுக மாற்றிவிட்டார்கள். விமானத்திலும் ஏற்றிவிட்டார்கள்! மண்ணேகா மங்கையின் நடைபோல் விமானம் ஊர்ந்து செல்ல; மேளந் தாளம் முழங்க; மக்கள் மன்றம் நடந்தது மெல்ல!

அழுதபடியே கதிரவனும் அக் கூட்டத்தில் கலந்து கொண்டு நடந்தான்—அவன் விழிநீரை துடைக்க அங்கொரு நாதியில்லை!

தெருவினில் நின்ற பாவையர் கூட்டங்கள் கூடி நின்று பார்த்து பரவசமடைந்தது! ஆனுல், அருவிப் போல் வழியும் மங்களத்தின் கண்ணீரை நிறுத்த ஒரு நீதியில்லை!

பரித்து உண்ண, சிரித்துப் பறக்கும் பறவைகள் போன்று பருவக் காளையர்களும் கண்டு களித்தனர்—ஆனுல், வெறுத்து வெதும்பி, வேதனை நிறைந்து காணும் மங்களத்தின் மதியில் மகிழ் பொங்கிட செய்ய அங்கோர் கருணையில்லை!

இனிக்கும் தேன் நாவில் பட்டது போல், சுவைத்து நோக்கும் முதுமையுடையவர்களும் பதுமை போல் நின்று பார்த்தனர்; சுகமில்லா உடல் சூடேறிக் கிடப்பது போல்—அடிபட்ட மைனு சுடர்புதரில் விழுந்தது போல், மங்களம் அலங்கார பீடத்தில் சாய்ந்திருந்தாள்; அவளை தேற்ற ஓர் உண்மையில்லை.

மங்களக் கோலத்தோடு மங்களத்தை தேர் சுமந்துக்கொண்டு நகர்ந்தது; பேரின்பம் பொங்கிட மாணிக்கம் மகளைப் பார்த்தபடியே சென்ருர்!

எரிமலையாக மாறிவிட்ட கதிரவன், தன் கால்களை நோக்கியபடியே நடந்து கொண்டிருந்தான்! கோலாகலத்துடன் மாபெரும் கூட்டம் மணப்பந்தலை நெருங்கிக் கொண்டிருந்தது!

பச்சைப் பந்தல் மேல் ஒலித்தப் பாடல்கள் வந்தோர்களை தலையாட்டும்படி செய்து கொண்டிருந்தது. அச்சம் விளைவிக்கும் ஆச்சரிய 'மத்தாப்பூ, வெடித்துப் பறந்து வண்ணநிற ஒளிகளை வீசியது! விசித்திர ஆட்டம்—வியப்பு மிகுந்த நாட்டியம் வந்தவர்களுக்கு வருகை தந்தது—வந்த பெரும் திறன், அன்பான அழைப்பைக் கண்டு களித்தது!

இத்தனை விழாக்கோலத்தைக் கண்டுவிட்ட மார்கண்டேயன் விரைந்து பறக்கும் சைக்கிள் மோட்டாரில் ஏறி, வருகின்ற பெண்ணழைப்பில் கலந்து கொள்ளாது, அவன் நெஞ்சினை தொட்டுக் கொண்டிருந்த மர்மத்தினிடம் வண்டியைத் திருப்பினுன்!

வேகக் குறிப்பையும் பார்க்கவில்லை அவன்; விநாடிக்குள் போய்ப் பார்க்க எண்ணியதால் வேகத்தை அவன் கை தூண்டிக் கொண்டே இருந்தது; சைக்கிள் மோட்டார் காற்றில் பறந்தது—கண்மூடி திறப்பதற்குள் எண்ணற்ற மைல் 'கற்களைக் கடந்துக் கொண்டிருந்தது!

அவன் மனக் கண்ணில் மலர்ந்து எழிலும்—மணமும் கமழும் கானக் கருங்குவளை மலரைக் கண்டுவிட்டு திரும்பிட—எத்தனையோ திட்டங்களை. மனதுக்குள் தயாரித்துக் கொண்டு செல்லும்போது, சிரித்தான்—முறைத்தான்—வருத்தம் மிகக் கொண்டான்! கெஞ்சினுன்-கொஞ்சினுன்—அஞ்சினுன் ஆத்திரப் பெருக்கால் ஆர்த்தெழுந்தான்! இத்தனையும், அவன் காணப் போகும், கோமதக் கோவிலில்—கோர்த்த முத்துப்போன்ற பற்களைக் காட்டிச் சிரிக்கும் சித்திரத்தினிடம் நடித்துக்காட்ட வேண்டிய பாவனைகளை எல்லாம், ஓடும் சைக்கிள் மோட்டாரில் அமர்ந்து கொண்டு செய்தான்!

நல்ல இருள்!...எதிரில் என்ன வருகிறது என்று கண்டறிய முடியாத கடுமையான இருள்! தாரகைகளின் ஒளிகளை விழுங்கி விட்டு, பாரெங்கும் படர்ந்து இருக்கும் மேகக் கூட்டங்கள், பார்வைகளுக்கு வெறும் கரிய நிறத்தையே அளித்துக் கொண்டிருந்த அந்த இரவு மேடு பள்ளங்களைப் பாராது, ஒரே வேகத்தால் பாய்ந்தோடும் மார்கண்டேயன் சைக்கிள் மோட்டாரின் விளக்கின் ஒளிக்கு மட்டும் பயந்து பாதையைக் காட்டி ஒதுங்கி நின்றது!

ஒளி முன்னேடியது! ஒளி உமிழும் சைக்கிள்மோட்டார் பின்னே வேங்கை போல் பாய்ந்தது. மோட்டாரில் உட்கார்ந்திருந்த மார்கண்டேயன் பார்வையும்—எண்ணமும் தன்னகமில்லை.

எதிரே!

[அடுத்த இதழில் முடியும்]

நகர மன்றத்தில் நாம் !

76-வது வட்டம்

எஸ். சம்பந்தப்பா	-காங்	3603
நீல் நாராயணன்	-தி.மு.க.	3387
வடிவேலு	-சு	118
டி. முனுசாமி	,,	34
செல்லாதவை		112

77-வது வட்டம்

காஜா மொய்தீன்	-லீக்	3549
எம். எஸ். அப்துல்ரகீம்	-சு	2409
சங்கர்	-கு.கா.	256
எம். எஸ். ஹயாத்	-சு	167
செல்லாதவை		81

78-வது வட்டம்

க. பார்த்தசாரதி	(தி.மு.க.)	4090
ஏழுமலைசெட்டியார்	(காங்)	2347
இராமசாமி நாயக்கர்	க.வே.க.	90
செல்லாதவை		83

79-வது வட்டம்

மு. அரங்கநாதன்	(தி.மு.க.)	2334
எம்.ஜே.துரைராஜ்	(காங்)	2166
டாக்டர் அப்துல் கரீம்	க.வே.க.	518
துலுக்காண நாய்க்கர்	(சு)	304
செல்லாதவை		142

80-வது வட்டம்

கே. நாகலிங்கம்	(காங்)	2387
அலமேலு அப்பாதுரை	(தி.மு.க.)	2039
ஆதிமூலம்	(சு)	295
நடேசன்	,,	89
கே. ரங்கராசன்	,,	69
சிவஞானம்	,,	67
ஏ. என். வேலாயுதம்	க.வே.க.	39
செல்லாதவை		108

81-வது வட்டம்

ஆர். கண்ணப்பன்	(காங்)	3148
கே. எஸ். ராசமாணிக்கம்	(தி.மு.க.)	2796
செல்லாதவை		101

82-வது வட்டம்

நடேசபிள்ளை	(காங்)	2231
எஸ். வி. வேலு	(தி.மு.க.)	2213
பாலசுப்பிரமணியம்	(த.அ.க.)	150
ஏ. பீட்டர்	(சு)	69
எஸ். கிருஷ்ணன்	,,	42
செல்லாதவை		67

83-வது வட்டம்

துளசிங்கம்	(தி.மு.க.)	2892
எஸ். கோதண்டராம நயினர்	(காங்)	2203
செல்லாதவை		116

84-வது வட்டம்

கே.கோவிந்தசாமி	(தி.மு.க.)	3650
எஸ். ஆறுமுகம்	(காங்)	2647
பா. சீனிவாசன்	(சு)	48
ஜி. அய்யாசாமி	,,	28
செல்லாதவை		131

85-வது வட்டம்

டி. நம்பித்துரை	(தி.மு.க.)	2695
ஜி. ரங்கரத்தினம்	(காங்)	2233
வி. கிருஷ்ணன்	(சு)	242
ஜி. வேணுகோபால்	(த.அ.க.)	86
ராஜா	(சு)	71
செல்லாதவை		90

86-வது வட்டம்

கே. எஸ். குஞ்சிதபாதம்	(காங்)	2480
சாரங்கன்	(தி.மு.க.)	2331
ஏ. சீனிவாசன்	(சு)	133
செல்லாதவை		92

87-வது வட்டம்

ஏ. செல்வராசன்	(தி.மு.க.)	2761
எஸ். நடராசன்	(காங்)	2607
பி. ஆர். இராமலிங்கம்	(கம்)	298
எஸ். கே. சின்னசாமி	(சு)	191
எம். கிருஷ்ணபிள்ளை	,,	96
செல்லாதவை		110

88-வது வட்டம்

வ. புருடோத்தமன்	(தி.மு.க.)	3334
டி. எம். சண்முகம்	(தி.க.)	2262
ஓ. கே. பாளையம்	(சு)	527
செல்லாதவை		44

89-வது வட்டம்

டி. கே. கபாலி	(தி.மு.க.)	4455
எஸ். கண்ணன்	(காங்)	3744
ஆறுமுகம்	(சு)	131
செல்லாதவை		114

90-வது வட்டம்

கே. அனந்தகிருஷ்ணன்	(காங்)	1484
அ. ச. சங்கரன்	(தி.மு.க.)	1348
ஏ. கதிர்வேலு	(சு)	885
ஏ. ஆதிமூலம்	,,	558
எம். செயராமன்	(பி.சோ.)	52
நடராசநாயக்கர்	(க.வே.க.)	48
செல்லாதவை		86

91-வது வட்டம்

எஸ். அற்புதராஜ்	(காங்)	5130
சி.வி. சிட்டிபாபு	(தி.மு.க.)	3719
சி. வி. மலையன்	(சு)	2362
எஸ். இராமமூர்த்தி	,,	96
செல்லாதவை		269

92-வது வட்டம்

சா. கணேசன்	(தி.மு.க.)	6141
டி. அய்யாவு	(காங்)	3184
வாசுதேவன்	(நா.த.)	465
எஸ். பி. செல்லப்பா	(கம்)	383
ஜி. அண்ணுசாமி	(சு)	249
மன்னுர் முதலியார்	,,	169
பாலசுப்பிரமணியன்	,,	46
பி. டி. சுரேந்திரன்	,,	41
செல்லாதவை		199

93-வது வட்டம்

எஸ். கிருஷ்ணமூர்த்தி	(கழக ஆதரவு-சு)	3861
கே. டி. சோமசுந்தரம்	(காங்)	2179
ஏழுமலை நாய்க்கர்	(சு)	263
பி. இராசகோபாலன்	,,	251
செல்லாதவை		117

94-வது வடடம்

இரா. சடகோபன்	(தி.மு.க.)	3438
எஸ்.என்.கண்ணன்	(காங்)	3118
எம். கே. சீனிவாசன்	(சு)	252
சுப்பிரமணியம்	,,	32
மானுவேல்	,,	30
ராஜா முத்து	,,	52

95-வது வட்டம்

சவுரிராசன்	(காங்)	3744
எம். கணபதி	(சுத)	2901
சஞ்சீவி	(சு)	87
சுப்பையா	,,	83
மணவாளன்	,,	31
செல்லாதவை		112

96-வது வட்டம்

கே. எம். சுப்பிரமணியம்	(காங்)	4271
கோ. அய்யாவு	(தி.மு.க.)	3820
எம். கே. சீனிவாசன்	(சு)	36
எம். எஸ். சுப்பிரமணியம்	(சு)	722
பி. ஞானப்பிரகாசம்	,,	245
பி. ஏ. ராஜு	,,	22
ஜி. வி. விசுவேசுவரன்	த.அ.க.	262
செல்லாதவை		121

97-வது வட்டம்

சைதை சம்பந்தம்	[தி.மு.க.]	3263
ஏ. சுப்பிரமணியம்	(காங்)	3187
எஸ். பி. கண்ணன்	(சு)	59

98-வது வட்டம்

சி. பி. பவளவண்ணன்	[தி.மு.க.]	3522
பி. குமாரசாமி	(கு.கா.)	3188
நைனியப்பன்	(சு)	64

99-வது வட்டம்

எம். கோபால்	[தி.மு.க.]	3749
சக்கரபாணிநாயகர்	(காங்)	2631
சந்திரன் ஜெயபால்	[சு]	317
ஆர். முனுசாமி	,,	27

100-வது வட்டம்

ஆர்.டி.பாஸ்கரன்	[தி.மு.க.]	2862
கண்ணப்பமுதலியார்	[கா]	2160
கண்ணன்	[சு]	257
தட்சிணமூர்த்தி	[தி.க.]	101
செல்லாதவை		124



அறப்போர் வீரர் வெற்றி!

—(○)—

சென்னை 35-வது வட்டத்தில் கழக வேட்பாளராகப் போட்டியிட்ட தோழர் கோ. லோகநாதன், இந்தி எதிர்ப்பு மறியலில் கலந்துகொண்டு ஆறுமாத கடுங்காவல் சிறைத் தண்டனை அனுபவித்து வருபவராவார்.

இவர், சிறையிலிருந்து கொண்டே தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரசு வேட்பாளர் திருமதி எஸ். வனசாட்சி அம்மையாரைத் தோற்கடித்திருக்கிறுர்.

வேட்பாளரின் முகத்தைப் பாராமலே, வெற்றிபெறச் செய்த வாக்காளர் பெருமக்கள் வாழ்த்துக்குரியவர்களாவர்.

தோழர் லோகநாதன் பெற்ற வெற்றி, இந்தித் திணிப்புக்கு எதிராக—அடக்குமுறைக்கு எதிராக மக்கள் அளித்த தீர்ப்பு ஆகும்.

சென்னை மாநகராட்சி மன்றத்தில் கட்சிகளின் விவரம்

——0——

தி. மு. க.	49
காங்கிரஸ்	40
முஸ்லிம் லீக்	5
கம்யூனிஸ்டு	1
சுயேச்சை	4

(கழக ஆதரவு 2)

○

பகலவன் தோன்றினான்! பனித்துளிகள் சிதறின!

"நமது அதிகாரத்திற்கும் பொறுப்புக்கும் நாம் தகுதி உள்ளவர்களாக இருக்கவேண்டும். நமது வலிமையை விவேகத்துடனும் அடக்கத்துடனும் பயன் படுத்துவோம்"

—உலகின் தலைசிறந்த ஜனநாயகக் காவலன் கென்னடி அவனிக்கு இறுதியாக அளிக்க இருந்த செய்தி இது!

உலகின் ஜனநாயக விரோதிகளுக்கு அவன் அளித்த அறைகூவல் தமிழகத்துக்கு மிகமிகப் பொருந்தியதை, நடைபெற்று முடிந்த நகரசபைத் தேர்தல்களில் அனைவரும் அறிந்துகொண்டிருப்பர்!

தமிழகத் தலைநகரில் நடைபெற்ற தேர்தலில் மாநகராட்சியைக் கைப்பற்ற கஜகர்ணம் போட்டார்கள்!

காமராசர் வீடு வீடாக வந்தார்.

குடிசைகளுக்குச் சென்று நீராகாரம் குடித்தார்.

சேரிகளுக்கெல்லாம் சென்றார்!

விடிய விடியப் பேசினார்!

காங்கிரஸ் கட்சியின் அத்தனை அதிகாரங்களையும் பயன்படுத்தினார்.

அப்போதுதான் தமிழக மக்கள் "நமது வலிமையை விவேகத்துடனும் அடக்கத்துடனும் பயன்படுத்த வேண்டும்" என்று கென்னடி சொன்னதை நினைவுபடுத்திக் கொண்டார்கள்.

அடக்கம் தவறிப் பேசினார் காமராசர்!

விவேகமிழந்து செயல்பட்டார் காமராசர்!

தலைநகர மக்கள் தக்க தீர்ப்பளித்தார்கள்!

நெய்யிலே கைதோய்க்கிறோம் என்பவர்களுக்கு மெய்யே தெரியாது என்பது அம்பலமாகிவிட்டது!

ஜனநாயகத்திற்குக் கிடைத்த பரிசு 2,41,603 வாக்குகள்! 49 இடங்கள்.

கழகத்தின் ஆதரவு பெற்ற முஸ்லிம் லீகுக்கு 5 இடங்கள் கழக ஆதரவு பெற்ற சுயேச்சைகள் இருவர்!

ரிப்பன் மாளிகையைச் சுற்றியிருந்த பனிமூட்டம் விலகியது!

பகலவன் தோன்றி விட்டான் பனித்துளிகள் சிதறின!

அறிவுலக மேதை அண்ணா அவர்கள் சிறைக்குள்!

கழகத் தலைவர்கள் -- தோழர்கள் சிறைக்குள்!

வெட்டிவா என்றால் கட்டி முடித்துவரும் தம்பிகள் தேர்தல் களம் புகுந்தனர்!

வாகை சூடினர்! அண்ணாவின் முகத்தில் வெற்றிப் புன்னகை!

அதைக் கண்டு களிக்க ஏங்கும் இலட்சக்கணக்கான தம்பிகள் வெளியே!

பகலவன் வெளி வருவான்! பனித்துளிகள் சிதறுண்டு ஓடும்!

O

என்.வி.என்.சோமு.பி.ஏ.

நாட்டு மக்களின் கருத்தறியும் கண்ணாடியான தேர்தல்களை, அமைச்சர்களது அதிகாரமும் பதவியும் திசை திருப்பக்கூடாது என்பது நல்லோர் கண்ட முடிவு.

இந்தியத் துணைக்கண்டத்தில் மிகப் பெரிய ஜனநாயக அமைப்பான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனிப் பெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களிலிருந்து ஆச்சாரியார் உள்ளிட்ட பெருமக்கள் இந்த உயரிய அரசியல் நாகரிகத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் கடைப்பிடிக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்தனர்.

ஆனால் காங்கிரஸ் அமைச்சர்களோ, பொதுத்தேர்தல்கள் என்ன—கட்சி மாச்சரியங்களே இருக்கக்கூடாத நகரசபைத் தேர்தல்களுக்குக்கூட நாங்கள் வருவோம் என்று செய்து காட்டியுள்ளனர்.

நல்ல மனிதனுக்கு ஒரு சொல் —நல்ல மாட்டுக்கு ஒரு சூடு!

காங்கிரஸ் மாட்டுக்கு எத்தனை சூடு போட்டாலும் உணர்வு பிறப்பதில்லை.

தமிழகத்தில் நடைபெற்ற தேர்தல்களில் அமைச்சர்கள் சுற்றுலா வந்தார்கள்.

காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சினார்கள்!

காமராசரை மதுரைக்காரர்கள் பரிசு கேட்டார்களாம்—தி. மு. கழகத்துக்கு ஒரு இடம்கூட கிடைக்காமல் செய்துவிட்டார்கள் என்பதற்காக!

இரு, இரு! பொறு, பொறு! சென்னைக் காங்கிரஸ்காரர்கள் கோபித்துக்கொள்வார்கள்; அவர்கள் தி. மு. கழகத்தை ஒரு இடத்தில்கூட வரவிடப் போவதில்லை -- அவர்களுக்குத்தான் பரிசு எனப் பகர்ந்தாராம் காமராசர்!

அவரது ஆணவத்துக்குத் தக்க பாடம் கற்பித்தது தலைநகரம்!

காங்கிரஸ்
குட்டிக் காங்கிரஸ்
கம்யூனிஸ்டு
தி. க.

இவைகளின் பொருந்தாக் கூட்டுக்கு, திருவண்ணாமலையில் முதல் அடி!

சென்னை மாநகராட்சித் தேர்தலில் இரண்டாவது அடி!

குட்டிக் காங்கிரஸ்காரர்கள் குட்டிக்கரணங்கள் போட்டனர்-- குட்டிச் சுவராயினர் இன்று!

பொதுவுடைமையர் எதிர்க் கட்சிகளுக்குச் செய்த துரோகத்துக்குத் தக்க பலனை அனுபவிக்கிறார்கள்!

சத்திய சீலர்களைப்போல் வேஷம் போட்டவர்கள், சழக்கர்

"திராவிடன்"

பத்திரிகையின் விவரங்களும் மற்றும் அதன் உரிமையாளரைப் பற்றிய விவரங்களும்.

1.	வெளியாகும் இடம்	...	சென்னை
2.	வெளியிடும் நாட்கள்	...	வாரம் ஒருமுறை [சனி]
3.	அச்சிடுவோரின் பெயர்	...	புவனேசுவரி
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	சோமு அச்சகம், 16 இப்ராகிம் சேட் தெரு சென்னை-1.
4.	வெளியிடுவோரின் பெயர்	...	என். வி. நடராசன்
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	16 இப்ராகிம் சேட் தெரு சென்னை-1.
5.	ஆசிரியரின் பெயர்	...	என். வி. நடராசன்
	இனம்		திராவிடர்
	முகவரி		16 இப்ராகிம் சேட் தெரு சென்னை-1
6.	பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களும், முகவரிகளும் அல்லது பத்திரிகையின் மொத்த மூலதனத்தில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான பங்குகொண்டுள்ளவர்களின் பெயரும் முகவரியும்.	...	என். வி. நடராசன் 16 இப்ராகிம் சேட் தெரு சென்னை-1.

என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்று என். வி. நடராசனாகிய நான் உறுதியளிக்கின்றேன்.

29—2—64 (ஒப்பம்) **என். வி. நடராசன்**

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1